REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 8உ புதன் (24—8—55) ★ ★ வெளியூர் : ஆவணி 9உ வியாழன் (25—8—55) [இதழ் 61

தென்னாட்டில் 'தீபாவளி'யைக் கொண்டாட இராசேந்திரர் உத்தேசமாம்!

இந்தியப் பேரரசின் தலைவர் டாக்டர் இராசேந்திரப் பிரசாத் நவம்பர் திங்களில் சென்னைக்கு வந்து இரண்டு வாரங்கள் தங்குவார் என்று தெரிகிறது.

தென்னாட்டில் இரண்டு மாதங்கள் தங்க வேண்டும் என்று புதிதாக ஏற்படுத்திக்கொண்டுள்ள 'மரபு'ப்படி, அவர் இரண்டு வாரம் சென்னையில் தங்குவார் என்று தெரிகிறது.

இப்போது ஆந்திராவில் தங்கியிருப்பது உட்பட அவர் இந்த ஆண்டில் ஆறு வாரங்கள் தென்னாட்டில் தங்கியுள்ளார் என்று தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

"'மான்சிங்'குகளாக மாறுவோம்!"

'போராட்டம் நடத்துவோம்'

'காங்கிரஸ் மந்திரி சபைகள் பதவியை துறக்கவேண்டும்'

'நஷ்ட ஈடு' கோரும் நிலப்பிரபுக்கள் கொக்கரிப்பு

ரட்லம், ஆக. 23—

'ஜாகிர்தாரி' முறையை ஒழித்தபோது, மத்திய பாரத் சர்க்கார் தங்களிடமிருந்து எடுத்துக்கொண்ட நிலங்களுக்குப் போதுமான நஷ்ட ஈடு தராவிட்டால், தாங்கள் 'சத்தியாக்கிரகத்'தில் ஈடுபடப்போவதாக, சுமார் 500 சிறு நிலப் பிரபுக்கள் சர்க்காரை அச்சுறுத்தியிருக்கின்றனராம்!

'ராஜபுத்திர சேவா சங்கத்'தின் ஆதரவில் நடைபெற்ற நிலப் பிரபுக்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய இராஜஸ்தானைச் சேர்ந்த தக்கூர் தாதா என்பார், "சர்க்கார் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறினால், ஆயிரக்கணக்கான இராஜபுத்திரர்கள், தங்களின் முழு ஆற்றலையும் பயன்படுத்திப் போராடுவார்கள்," என்று கூறினாராம்!

"கோரிக்கைகளை நிறைவேற்றுவிட்டால், மத்திய பாரத்தின் பிரசித்திபெற்ற கொள்ளைக் கூட்டத் தலைவனான 'மான்சிங்' போன்று நூற்றுக்கணக்கான 'மான்சிங்'குகள் தோன்றுவர்" என்று 'எச்சரித்'திருக்கிறாராம்!

மேலும் பேசிய அவர், "மத்திய, மாநில ஆட்சிகளிலுள்ள காங்கிரஸ் மந்திரி சபைகள் பதவியை விட்டு விலக வேண்டும்; காங்கிரஸ் மந்திரிகள் கோவா விடுதலை இயக்கத்திற்குத் தலைமை ஏற்க வேண்டும்," என்றாராம்!

இந்திய சர்க்கார் அனுமதி தந்தால், இராஜபுத்திரர்கள் கோவாவிற்குள் நுழையத் தயார்; போர்ச்சுகீசியரின் பலாத்காரத்தை வாட்களாலும், துப்பாக்கிகளாலும் எதிர்த்துப் போராடத் தயார்" என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

மீண்டும் 7 மாநிலங்கள் கடன் எழுப்புகின்றன!

ஆந்திரா, பம்பாய், சௌராஷ்டிரம், மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், உத்திரபிரதேசம், மைசூர் ஆகிய 7 மாநில சர்க்கார்கள், இரண்டாவது முறையாக ரூ. 11,75,00,000-த்திற்கு 4 சதவிகித வட்டிக்கு கடன் பத்திரங்களை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளனவாம்!

படைகளை வெளியேற்ற ஒப்புக்கொண்டனர்

சூடான் தலைநகரிலிருந்து தங்கள் படைகளை நவ. 12-ந் தேதியன்று வெளியேற்ற, பிரிட்டனும், எகிப்தும் ஒப்புக்கொண்டனவாம்!

முடிவு தெரிந்துவிட்டது!

மூன்றாவது உருக்குத் தொழிற்சாலை வடநாட்டில்தான் நிறுவப்படும்!

இந்தியாவில் மூன்றாவது இரும்பு உருக்குத் தொழிற்சாலையை நிறுவுவது பற்றி மேற்கு வங்கம், பீகார் ஆகிய மாநில சர்க்கார்களை மத்திய சர்க்கார் கலந்தாலோசிக்கும் என்று தெரிகிறது.

துர்காபூர் அல்லது சிந்திரியில், இந்தத் தொழிற்சாலை நிறுவப்படலாம்; பீகாரில் உள்ள பொகாரோ என்ற இடமும் இரண்டாவதாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாம்!

★

ஏற்றுக்கொண்டுவிட்டது

புதுடில்லி, ஆக. 23—

இந்தியாவில் மூன்றாவது இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவுவதைப் பொறுத்து, பிரிட்டிஷ் நிபுணர் குழு தாக்கல் செய்துள்ள சிபாரிசுகளை இந்திய சர்க்கார் பொதுவாக ஏற்றுக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது.

தென்னாட்டில் ஒரு 'டயர்' உற்பத்தித் தொழிற்சாலை?

பரிசீலனையிலிருக்கிறதாம்!

"திட்டங்கள் பரிசீலனையிலுள்ள புது 'டயர்' உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று, தென்னாட்டில் ஏதேனும் ஓர் இடத்தில் துவங்கப்படும்,"

என்று, தொழில் மந்திரி நித்தியானந்த கனுங்கோ மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் சில உப கேள்விகளுக்கு பதிலளிக்கையில், "திரு-கொச்சியில் ரப்பர், டயர் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவது பற்றி சர்க்காரிடம் திட்டம் எதும் இல்லை; திரு-கொச்சி சர்க்கார், அதற்கான திட்டங்களைத் தாக்கல் செய்திருக்கிறது என்பதும் உண்மையல்ல," என்று, மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவில் தாண்டவமாடும் நிற வெறி!

இந்தியத் தூதுவருக்கு ஏற்பட்ட அனுபவம்

'நீக்ரோவர்' எனக் கருதப்பட்டு உணவு விடுதியை விட்டு வெளியேற்றப்பட்டார்

சர்க்கார் மன்னிப்பு கோருகிறது

ஹௌஸ்டன் (டெக்சாஸ்) ஆக. 23—

இங்குள்ள 'சர்வதேச' விமான நிலையத்தில் உள்ள உணவு விடுதி ஒன்றிலிருந்து, அமெரிக்காவில் இந்தியத் தூதுவராயுள்ள ஜி. எல். மேத்தா, அவரது செயலாளர் ஆகிய இருவரும் வெளியேறுமாறு அந்த விடுதி நிர்வாகியால் கோரப்பட்டனராம்; அவர்கள் இருவரையும் 'நீக்ரோவர்' என்று அந்த விடுதியின் நிர்வாகி நினைத்தாராம்!

மேத்தாவும் அவரது செயலாளரும் நிர்வாகியின் 'உத்தரவை'க் கேட்டு ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்தவண்ணம், நிர்வாகி காட்டிய தனி அறைக்குச் சென்று அமர்ந்தனராம்.

வெள்ளையருக்கும், நீக்ரோவருக்கும் ஒரே அறையில் உணவு பரிமாறுவதை டெக்சாஸ் சட்டம் அனுமதிக்கவில்லையாம்; ஆனால், 'பெடரல்' ஒப்பந்தப்படி, 'விமான நிலையத்தில் பாகுபாடு அனுசரிப்பது கூடாது,' என்றிருக்கிறதாம்!

மேத்தாவும், அவரது செயலாளரும், வாஷிங்டனிலிருந்து மெக்சிகோ நகர் செல்லும் வழியில், விமானத்திற்காக, 'ஹௌஸ்டன்' விமான நிலையத்தில் இரண்டரை மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்ததாம்; அப்போது, விமான நிலையத்திலிருந்த அந்த உணவு விடுதிக்கு சாப்பிடுவதற்காகச் சென்றனராம்; அப்போதுதான், அவர்

(4-ம் பக்கம் பார்க்க.)

பணிக்கருக்கு தூதுவர் பதவி?

புதுடில்லி, ஆக. 23—

மாநில புனரமைப்புக் குழு தனது அறிக்கையை வரும் செப்டம்பர் இறுதிக்குள் தாக்கல் செய்ததும், சர்தார் கே. எம். பணிக்கருக்கு ஏதேனும் அரசியல் தூதுவர் அலுவல் தரப்படலாம் என்று தெரியவருகிறது.

அவர் இன்று பிரதமர் நேருவைச் சந்தித்தது இந்தச் செய்திக்கு உரமூட்டியுள்ளதாம்.

பலதார மணத் தடை

இராணுவத்திலும் அமுல்?

வட்டார (டெரிடோரியல்) இராணுவத்தினரும், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மனைவிகளாக்கிக் கொள்ளக் கூடாதென தடை விதிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆந்திராவும் 'காவடி' தூக்குகிறது!

திட்டத்துடன் டில்லி பயணம்: கோபால்ரெட்டி தலைமை தாங்குவார்

கர்னூல், ஆக. 22—

ஆந்திர மாநில சர்க்கார் தயாரித்துள்ள ரூ 245 கோடி பெறுமான இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி ஆந்திர சர்க்காரின் பிரதிநிதிகள், ஆகஸ்டு 29-ந் தேதி முதல் ஐந்து நாட்களுக்கு மத்திய திட்டக் குழுவுடனும் மத்திய சர்க்காருடனும் விவாதிப்பர் என்று தெரிகிறது.

ஆந்திர மாநிலம் மேற்கொள்ளும் இந்தக் 'காவடி'க்கு முதன் மந்திரி பி. கோபால்ரெட்டி தலைமை தாங்குவாராம். அவருடன் உதவி முதன் மந்திரி என். சஞ்சீவி ரெட்டி, திட்ட மந்திரி காளா வெங்கட்ராவ், மற்றும் உயர்தர அதிகாரிகள் ஆகியோர் செல்வராம்.

அன்று பாடினர்; இன்று கூறுகிறார்!

"நான் சிறையில் இருந்த காலத்தில், பல பாட்டுக்களைப் பாடியுள்ளேன்; அதன் காரணமாக, அடுத்த அறையில் இருந்தவர்களெல்லோரும், தங்களை வேறு அறைகளுக்கு மாற்றுமாறு சிறை அதிகாரிகளிடம் கோரினர்,"

என்று, சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், சென்னை சட்ட சபையில், சிறைகளில் கைதிகளைப் பாட அனுமதிப்பது பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது குறிப்பிட்டுள்ளார்.

பீகாரின் 2-வது திட்டம்

கோசி, தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் நீங்கலாக ரூ. 642 கோடி மதிப்பு

புதுடில்லி, ஆக. 22—

பீகார் மாநிலம் தனது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை ரூ. 642 கோடி மதிப்புக்குத் தயாரித்திருக்கிறது; இந்த மதிப்பீட்டில், கோசி, தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் தொகை சேர்க்கப்படவில்லை; அந்தத் திட்டங்களுக்கான தொகை அல்லாது, இதர திட்டங்களுக்காக மட்டுமே இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள தொகையின் மதிப்பு ரூ. 642 கோடியாகும்.

இப்போது இந்த நகல் திட்டம் குறித்து முதன் மந்திரி டாக்டர் சின்ஹா, திட்டக் குழுவுடன் விவாதித்துக்கொண்டிருக்கிறாராம்.

"பீகார் பெரும் அளவு விவசாயத்தையே நம்பியுள்ளது; விவசாயத்தைப் பொறுத்தே மாநிலத்தின் அபிவிருத்தி இருக்கிறது." என்று டாக்டர் சின்ஹா கூறியிருக்கிறாராம்.

"4 கோடி மக்கள் தொகையும், மாநிலத்தின் பின்தங்கிய நிலையுமே இப்போதைய திட்டம் உருவாக்கப்படும்போது கவனத்திற்கொள்ளப்பட்டவையாகும்," என்றும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

37,000 தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

கல்கத்தா, ஆக. 23—

ஜல்பைகுரி மாவட்டத்தில் உள்ள 33 தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும், 37,000 தோட்டத் தொழிலாளர்கள், தங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக, நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

1953, 1954 ஆகிய ஆண்டுகளுக்கு, தங்களின் நான்கு மாதச் சம்பளத்தின் அளவு, போனஸ் தர வேண்டும் என்பதே தொழிலாளர்களின் முக்கியமான கோரிக்கை என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—8—'55 புதன்

பிரச்சினை என்ன?

"இலங்கையில் உள்ள சுமார் 8 இலட்சம் 'இந்தியர்'கள், இலங்கைக் குடி உரிமை கோரி மனுச் செய்திருந்தார்கள்;

"1955 ஜூலைத் திங்கள் வரை 97,000 பேர் மட்டுமே இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர்;

"இலங்கை சர்க்கார், குடி உரிமை மனுக்களை பைசல் செய்வதில் காலம் தாழ்த்தி வரும் போக்கினைப் பார்த்தால், மொத்தத்தில் 2 லட்சம் பேர்களுக்குமேல் குடி உரிமை வழங்கப்படமாட்டாதோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது;

"'இலங்கையில் வாழும் 'இந்தியர்'கள் பற்றிய பிரச்சினை திருப்திகரமாக இல்லை' என்று இந்தியப் பிரதமர் பண்டித நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்."

—இவை, இந்தத் திங்களில் வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகளின் சாரம்.

"குடி உரிமை கோரியவர்களின் எண்ணிக்கை 8 இலட்சம்;

"இதுவரை உரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை 97,000;

"மொத்தமாகக் குடி உரிமை பெறுவர் என்று நம்பப்படும் 'இந்தியர்'களின் எண்ணிக்கை 2 இலட்சம்;

"'இந்தியர்'கள் பிரச்சினை திருப்திகரமாக இல்லை."

—இவை, அந்தச் சாரத்தில் கிடைக்கும் சத்து!

"டட்லி சேனநாயகா இலங்கைப் பிரதமராயிருந்த காலத்தில், 4 இலட்சம் 'இந்தியர்'கள் குடி உரிமை பெறுவர் —மேலும் 2½ இலட்சம் பேருக்கு நிரந்தரக் குடியிருப்பு அனுமதி கிடைக்கும் என்று நம்புகிற நிலை; ஆனால், கொத்தலாவலை காலத்தில் மொத்தமாக 2 இலட்சம் பேருக்கு மேல் குடி உரிமை பெற முடியாது என்று அஞ்சுகிற நிலை."

—இது, மற்றொரு செய்தி கூறும் விளக்கம்.

"கடந்த 1955 ஜனவரி முதல் மே திங்கள் முடிவு வரை குடி உரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 11,916; குடி உரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை 146 மட்டுமே!"

—இது வேறொரு செய்தி தரும் விளக்கம்.

"சுமார் எட்டு இலட்சம் இலங்கை வாழ் 'இந்தியர்' இலங்கையில் குடி உரிமை கேட்கின்றனர்; கிடைத்திருப்பது இன்றுவரை 97,000 பேர்களுக்கு மட்டும்; மொத்தத்தில் இரண்டு லட்சம் பேர்களுக்குத்தான் குடி உரிமை கிடைக்கும் என்று நம்பப்படுகிறது; அப்படியானால், எஞ்சியுள்ள ஆறு இலட்சம் 'இந்தியர்'கள் என்ன ஆவது?"

"அந்த ஆறு இலட்சம் மக்களை, இலங்கை, தன் நாட்டுக் குடி மக்களாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறது; இந்திய சர்க்காராவது அவர்களை 'இந்தியர்'கள் என்று ஏற்றுக்கொள்ளப் போகிறதா இல்லையா?

"இந்திய சர்க்காரும் அந்த ஆறு இலட்சம் மக்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர்களை எல்லாம், அடுத்திருக்கும் இந்து மகா சமுத்திரத்தில் தள்ளி விடுவதா? அல்லது இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை சிலநாள் முன் கூறியது போல—"இலங்கையில் உள்ள 'இந்தியர்'களை எல்லாம் பிரிட்டிஷார்தானே இலங்கைக்கு இந்தியாவிலிருந்து கொண்டு வந்தனர்; எனவே, அவர்களுக்குச் சொந்தமான ஆப்பிரிக்கக் காடுகளுக்கு போர்னியோவுக்கு அனுப்பி வைப்பதா?"

—இப்படியெல்லாம் இலங்கைவாழ் 'இந்தியர்' நிலைபற்றி பலவும் கேட்கப்படுகிறது.

இந்த நிலைகளை எல்லாம் உணர்ந்தவராகவே காணவில்லை சென்னை நிதி அமைச்சர்!

குடி உரிமை மறுக்கப்பட்டு இலங்கையிலிருந்து துரத்தப்படுகிறவர்களின் எதிர்காலம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல்கூட அவருக்கு இருப்பதாகக் காணோம்!

'இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படுகிறவர்களுக்கு மறு வாழ்வு அளிக்க சென்னை சர்க்கார் என்ன செய்யப் போகிறது?' என்று சட்ட சபையில் கேட்டால், மந்திரி சுப்பிரமணியம், 'பிரச்சினை பெரிதாக வளரவில்லை' என்ற பதில் கூறுகிறார்.

'பாகிஸ்தான் அகதிகளுக்குத் தரப்பட்டது போன்ற வாழ்க்கை வசதிகள், இலங்கையிலிருந்து துரத்தப்பட்டு தாயகம் திரும்பும் 'இந்தியர்'களுக்குத் தரப்படுமா?'—என்று கேட்டால், 'இலங்கையிலிருந்து இன்னும் எவரும் திருப்பி அனுப்பப்படவில்லை,'—என்று பதிலிறுக்கிறார்.

அவர் பார்வைக்குத்தான், நாம் மேலே திரட்டித் தந்திருக்கிற புள்ளிவிவரங்களை வைக்கிறோம்.

ஏற்கனவே, கடந்த 1955 ஜனவரி முதல் ஜூலை வரை 3,579 பேர் இந்தியக் குடி உரிமை பெற்றிருக்கின்றனர்.

அதற்கு முன்பு எத்தனை பேர்களோ?

பின், 1955 ஜனவரி முதல் மே முடிய 11,916 பேர்களுக்கு இலங்கை குடிஉரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் என்ன ஆனார்கள்?

இந்தியக் குடிஉரிமை பெற்ற 3,579 பேர்களும், இலங்கை குடி உரிமை மறுக்கப்பட்ட 11,916 பேர்களும் இலங்கையிலேயே இருக்கிறார்களா? அப்படியானால் எந்த அடிப்படையில்? அல்லது இலங்கையை விட்டு வெளியேறிவிட்டார்களா? அல்லது என்ன ஆனார்கள்?

பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவரும் செய்திகளிலிருந்து, கடந்த ஏழு மாத காலத்தில் இந்தியக் குடி உரிமை பெற்றவர்களும், இலங்கை குடிஉரிமை நிராகரிக்கப்பட்டிருப்பவர்களுமாக மொத்தம் 15,495 பேர்களும், நாள்தோறும் நூற்றுக்கணக்கில் தாயகம் திரும்பி வருகின்றனர் என்றே தெரிகிறது.

மேலும், 1955 ஜனவரிக்கு முன்பே, 'இனி நமக்கு இங்கு வாழ்வில்லை' என்று கருதி, தாயகம் ஓடிவந்துவிட்டவர்களின் எண்ணிக்கை பல ஆயிரம் உண்டு; அவர்கள் எல்லாம், திராவிட நாடெங்கணும் பரவலாக வாழ்வு தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர்.

சர்க்கார் தரும் புள்ளி விபரப்படியே, 'இந்தியர்'கள் என்ற பெயரில், கடந்த ஏழு மாத காலத்தில், இலங்கையில் தொடர்ந்து இருக்கமுடியாது நிர்ப்பந்திக்கப்பட்ட 15,495 பேர்களுக்கும் தாயகத்தில் வரவேற்பும், வாழ்த்தும், வாழ வழியும், தரப்பட்டனவா?—என்பதே நமது கேள்வி.

மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் கண்களுக்கு இந்த 15,495 என்ற எண்ணிக்கை பெரிதாகத் தெரியவில்லையா?

ஆறு இலட்சம் 'இந்தியர்'களும் துரத்தப்பட்டால்கூட, "அகதிகள் பல இலட்சமாயிற்றே; ஆனால், இலங்கை 'இந்தியர்' ஆறு இலட்சம் தானே! இது ஒன்றும் பெரிய பிரச்சினை அல்லவே!"—என்று கூறுவார்போல் தெரிகிறது, மந்திரியார்!

'குடிஉரிமை மறுக்கப்பட்டு, வாழ்விழந்து, தாயகத்திற்கு ஓடி வருபவர்களுக்கு வாழ்வு தரவேண்டுமா, வேண்டாமா?'—என்பதுதான் பிரச்சினையே தவிர, 'எத்தனை பேர் வந்துவிட்டார்கள், வாழ்வு தேடித்தருவதற்கு?' என்பதல்ல பிரச்சினை!

மந்திரி சுப்பிரமணியம் அவர்கள், முதலில், 'பிரச்சினை என்ன?' என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

மத்திய ஆட்சியினர் பதில் வரவில்லையாம்!

ஒரு தலைமுறைக்கு போலீசார் காத்திருக்க வேண்டுமாம்!

ஏ. கோவிந்தசாமியின் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, ஆக. 22—

"போலீசாரின் குடும்பம் பெரிதாகவும், கட்டித் தரப்படும் வீடுகள் சிறியதாகவும் இருப்பதால், கஷ்டமாக உள்ளது; ஆகவே, பெரிய வீடுகள் கட்டித் தருவது பற்றி கவனிக்கப்படுமா?" என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், சென்னை சட்டசபையில் ஒரு கேள்வியை எழுப்பினார்.

நிதி மந்திரி: "இப்போதுள்ள நிலைமையில், சிறிய வீடுகள் கட்டுவதே பிரமாதமானதாக உள்ளது; பெரிய வீடுகள் கட்டுவதானால், போலீசார், ஒரு தலைமுறை காத்திருக்க வேண்டும்; அன்றியும், போலீசார் எவரும் அது குறித்து கவலை தெரிவிக்கவில்லை; உறுப்பினர்தான், அதிருப்தியை வளர்க்க முயற்சிக்கிறார்."

அமைச்சர் மேலும் சொன்னார்:—

"போலீசாருக்கு வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி கோரப்பட்டதற்கு மத்திய ஆட்சியிடமிருந்து இதுவரையில் பதில் கிடைக்கவில்லை; எனினும், இவ்வாண்டில் போலீசாருக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ. 22 இலட்சம் சர்க்கார் ஒதுக்கியுள்ளது. சென்னை நகரில் 1,650 போலீசாருக்கு வீடுகள் உள்ளது; 2,814 பேருக்கு வீடுகள் கிடையாது."

அங்கும் அந்த அச்சம்!

திட்டத்தை சிதைக்காமல் விடுவார்களா?

திரு—கொச்சியும் 'டெல்லி'க்குக் காவடி எடுக்கும்!

திருவனந்தபுரம்—

திரு-கொச்சி மாநில சர்க்கார் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கென தயாரித்துள்ள நகல் திட்டத்தின் மதிப்பு ரூ. 130 7 கோடியாகும்; இந்தத் தொகையின் அளவில், பாதிக்குமேல், மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டி இருக்கலாம்.

'ஆனால் டில்லி, இந்தத் திட்டத்தின் அளவை சுருக்காமலிருக்குமா' என்பதில் வேறு, தென்னாட்டு மாநிலங்களைப்போலவே, திரு-கொச்சியும் அஞ்சுவதாகத் தெரிகிறது.

சென்னை மந்திரி சபையினர் தங்கள் நகல் திட்டத்தைத் தூக்கிக் கொண்டு டில்லிக்குச் சென்று விவாதித்த பின்னருங்கூட, அங்கு, அந்தத் திட்டம் பாதியாகக் குறைக்கப்பட்டிருப்பது, திரு-கொச்சி அதிகாரிகளின் அச்சத்தை மேலும் வளர்த்திருக்கிறதாம்!

திரு-கொச்சி மந்திரி சபையும் திட்டத்தைத் தூக்கிக்கொண்டு அடுத்த மாதம் டில்லிக்குக் காவடி எடுக்கவிருக்கின்றனர் என்று தெரிகிறது.

அந்தக் காவடிக்கு, முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் தலைமை தாங்குவார் என்று கூறப்படுகிறது.

டில்லியாளர்கள் தங்களிடம் சாதகமாகவே நடந்துகொள்வர் என்றும், தங்களது 'விசேட'த் தேவைகளை மனதில் கொண்டு, திட்டத்தை வெட்டமாட்டார்கள் என்றும், சில அதிகாரிகள் நம்புகின்றனராம்!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; ஆனாலும், இன்னும் மாநிலத்தில் 7,50,000 பேர் வேலையற்றிருக்கின்றனர் என்றும், சுமார் ஒரு இலட்சம் பேர் பற்றாக்குறை வேலை பெற்றிருப்பவர்களாக உள்ளனர் என்றும், சர்க்கார் தயாரித்துள்ள நகல் திட்டப்படியே, சுமார் 2,50,000 பேருக்குத்தான் புதிய வேலைகள் கிடைக்கும் என்றும், சுமார் 50,000 பற்றாக்குறை வேலை பெற்றிருப்பவர்களுக்கு மட்டுமே உதவ முடியுமென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கும் அப்பால் வெளியிலிருந்து ஏராளமான உதவி கிடைத்தாலன்றி வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது போய் விடும் என்று வேறு அஞ்சப்படும் போது, திட்டம் டில்லியினால் சுருக்கப்பட்டால், மேலும் நெருக்கடியாகுமென்று கூறப்படுகிறது.

கிராமங்களுக்கு மருத்துவ வசதி

டாக்டர்களுக்கு 'கட்டாயப் பணியாற்றும் முறை' வரக்கூடும்

"கிராமப் பகுதிகளில் சில ஆண்டுகள்வரை முதலில் பணியாற்றிய பிறகே, டாக்டர்கள், நகரங்களுக்கு வருவதை சாத்தியமாக்கும் பொருட்டு 'வைத்திய சர்வீசை' மாநில சர்க்காரின் அதிகாரத்திற்குக் கொண்டு வருவது பற்றி சுகாதார அமைச்சர் ஒரு திட்டத்தைப் பரிசீலனை செய்து வருகிறார்; அதன்படி ஒவ்வொரு டாக்டரும், 'முறை' விதித்துக் கொண்டு, கிராமப் பகுதிகளில் பணியாற்றுவர்; இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஏதாவது ஒரு கிராம மருத்துவ மனையில் வேலை செய்ய அவர்கள் கட்டாயப்படுத்தப்படுவர்; இம்மாதிரியான ஒரு நடவடிக்கை எடுக்காவிட்டால், கிராமப்பகுதிகளுக்கு வைத்திய உதவி அளிப்பது சாத்தியப்படாது,"

என்று, சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம், மருத்துவக் கல்லூரியில், நடைபெற்ற ஒரு உபசார விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தீண்டாமையை ஒழிக்க புதிய முயற்சி

அரிசனங்களுக்கு இனிமேல் தனி பள்ளிகள் கிடையாதாம்

சென்னை, ஆக். 23—

அரிசனங்களுக்காகப் பிரத்தியேகமாக இனிமேல் வருங் காலத்தில், பள்ளிகளைத் திறக்க வேண்டியதில்லை என்று சர்க்கார் தீர்மானித்துள்ளதாம்.

இவ்வாறு சிறுவர்களுக்குப் பிரத்தியேகமாகப் பள்ளிகளை ஏற்படுத்துவதால், அச்சமூகத்தைத் தனியாக ஒதுக்குவதாகிறது என்றும், இதனால், அவர்களுக்கும்—மற்ற வகுப்பினருக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட சாத்தியமற்றுவிடுகிறதென்றும், ஆகவே, எல்லோருக்கும் பொதுவான பள்ளிகளை ஏற்படுத்துவதே சிறந்த வழியென்றும், இப்பள்ளிகளில் அரிசனச் சிறுவர்களுக்கு 'முதல் சலுகை' வழங்கலாம் என்றும் கூறப்படுகிறது.

குறுக்கெழுத்துப் போட்டி

கட்டுப்படுத்த டில்லியின் சட்டம்

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்தும் மத்திய சர்க்காரின் சட்டம் தயாராகிவிட்டதென்றும், நடைபெற்றுவரும் மக்கள் சபைக் கூட்டத்திலேயே அது விவாதத்திற்கு வரும் என்றும் உதவி உள்நாட்டமைச்சர் பி. என். தத்தார், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மத்திய சர்க்கார் பல மாநில சர்க்கார்களையும் கலந்தாலோசித்ததாகவும், இப்போது இறுதி முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைந்தது

நீர்ப்பாசன நிலைமையில் நெருக்கடி உருவாகும்?

கடந்த 20-ஆண்டுகளில் இல்லாத அளவில், மேட்டூர் அணையில் தண்ணீர் மட்டம் குறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

21-ந் தேதியன்று தண்ணீர் மட்டம் 60-அடிதான் இருந்ததாம்!

மிகக் குறைந்த அளவில் தண்ணீர் மட்டம் இருப்பதால், தஞ்சை நீர்ப்பாசனத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இருக்கும் தண்ணீரை மிச்சப்படுத்துவது அவசியமென்றும் கருதப்படுகிறதாம்.

அளவுகடந்த வட்டி வாங்கும் கொடுமை

சட்டம் வருமென அறிவிப்பு

"அளவுகடந்த வட்டி வாங்கும் லேவாதேவிக்காரர்களின் மூலம் நாட்டிற்கும்—நாட்டு மக்களுக்கும் இழைக்கப்படும் நாசத்தை சர்க்கார் உணர்ந்துள்ளனர்; இதைத் தடுப்பதற்கு, சென்னை மாநிலத்தில், விரைவிலேயே ஒரு சட்டத்தை சர்க்கார் கொண்டு வரும்"

என்று, அமைச்சர் பக்தவத்சலம், இந்தியன் பாங்கி கூட்டுறவு ஊழியர் சங்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மலிவான விலையில் விமானமாம்!

45 முதல் 100 மைல் வேகத்தில் ஓடக்கூடியதாம்!

மிகவும் மலிவான விலையிலும், சுலபமாக நிர்வகிக்கக் கூடியதுமான ஓர் விமானத்தை, பிரிட்டிஷ் விமானத் தொழிற்சாலை ஒன்று தயாரித்திருக்கிறது.

இதன் உடலும், சிறகுகளின் சட்டமும் மரத்தாலானவை.

இறக்கைகள், கழற்றக் கூடியதாகவும், தேவையானபோது காற்றடைத்துப் பொருத்தக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

இறக்கைகளை மடித்து சிறு பெட்டியில் வைத்துவிடலாம்.

மணிக்கு 45 முதல் 100 மைல் வேகத்தில் ஓடக்கூடிய இந்த விமானத்தின் விலை 1000 பவுன்கள்.

இது, 65 குதிரை வேகமுள்ள ஒற்றை எஞ்சினுள்ளது; இரண்டு பேர் உட்காரக் கூடியது.

அணுசக்தி தகவல்கள்

பொது மக்கள் அறிவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது

அணுசக்தித் துறையில் இரகசியமாக வைத்திருந்த தகவல்களைப் பொது மக்களும் அறிவதற்கு அமெரிக்க அணுசக்திக் கமிஷன் கடந்த ஏப்ரல் முதல் 229 அனுமதிச் சீட்டுகள் வழங்கியுள்ளது; கடந்த ஜூலையில் அது வழங்கிய அனுமதிச் சீட்டுகள் 81 ஆகும். அணுசக்தியை ஆக்க வேலைகளில் செலுத்துவதற்குத் தனிப்பட்டவர்களும், தனிப்பட்ட கழகங்களும் ஒத்துழைக்குமாறு அது இவ்வாறு திட்டம் அமைத்து அனுமதியளித்து வருகிறது.

'அறிவைப் பரப்பிய பின் திரும்பப் பெற இயலாது'

விஞ்ஞானிகள் மாநாட்டில் டாக்டர் பாபா

"ஆக்க வேலைக்கு அணுசக்தியை உபயோகிக்கும் அறிவைப் பரப்பிய பின், அதைத் திரும்பப் பெறமுடியாது; அணுசக்தி விஞ்ஞானிகள் மாநாட்டின் முன்னேற்றத்தை எந்த சக்தியாலும் தடைசெய்ய முடியாது" என்று, ஜினிவா அணுசக்தி மாநாட்டின் முடிவுரையில், டாக்டர் பாபா குறிப்பிட்டார்.

அணுசக்தி கடியாரம்

ஒரு விநாடியில் 10,000-ல் ஒரு பங்கு தவறைக்கூட எடுத்துக்காட்டும் கடியாரம் ஒன்றை பிரிட்டிஷ் பௌதிக சோதனைக் கூட விஞ்ஞானிகள் தயாரித்திருக்கிறார்கள்.

'சேசியம்' என்ற உலோகப் பொருளின் அணுவாற்றல் பெற்ற 'துகள்'களிலிருந்து கிடைக்கும் விசையால் இந்தக் கடியாரம் இயங்குகிறது.

மிகவும் துல்லியமான நேரம் குறிக்கவும், ரேடியோ அலைகளின் 'கதி'யைக் கணிக்கவும் இந்தக் கடியாரம் பயன்படும்.

கீழ்பவானி அணையின் நீர்ப்பாசன மதகு!

ரூ. 11 கோடி செலவிடப்பட்டது

கோவையிலிருந்து 54 மைல் தூரத்தில் உள்ளதும், ரூ. 11 கோடி செலவில் கட்டப்பட்டதுமான கீழ்பவானி அணையின் நீர்ப்பாசன அணையின் மதகை, முதலமைச்சர் காமராசர் திறந்து வைத்தார்.

இம்மதகின் தண்ணீர், கோவை மாவட்டத்தில் கோபிசெட்டிப்பாளையம், பவானி, ஈரோடு, தாராபுரம் தாலுகாக்களிலும், திருச்சி மாவட்டத்தில் கரூர் தாலுகாவிலும் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட நிலத்திற்குப் பாசனவசதி தரும் இந்தப் பிரதேசத்தில், பருத்தியும், உணவுப் பயிர்களும் சாகுபடியாகின்றன. அணையின் மொத்த நீளம் 5½ மைல்களாகும்.

ஆசிரியருக்குக் கடிதம்:

கோயில் கட்டியது தமிழன்! ஆதிக்கம் புரிவது ஆரியமா?

ஐயா,

கங்கைகொண்டானில், இராசேந்திர சோழ மன்னனால் கட்டப்பட்ட கோயிலின் அமைப்பையும், சிற்பங்களின் சிறப்பையும் காண செயங்கொண்டம் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 96 பேரும், ஆசிரியர்கள் வை. இராசாங்கம், அ. அரங்கராசன், பாலசுப்பிரமணியம் ஆகியோரும் ஆகஸ்டு 13-ந் தேதி காலை புறப்பட்டு, 10½ மணியளவுக்கு கங்கைகொண்டசோழபுரத்தை அடைந்தனர். மாணவர் இளைப்பாறி உள்சென்று பார்ப்பதற்குள் திறந்திருந்த கோயிலை நிர்வாகிகள் மூடிவிட்டனர். பலமுறை திறக்கச் சொல்லியும் அங்குள்ள அய்யர் மறுத்துவிட்டார். மானேஜர் குப்புசாமி வீட்டில் சென்று கேட்டதற்கும், சாவி தந்து திறக்க முடியாது என்று மறுத்துவிட்டார். காவற்காரரும், 'வயலிலே வேலை நடக்கிறது; நான் வந்தால் வேலை கெட்டுவிடும்; கூலி ஆட்களுக்கு யார் சம்பளம் தருவது? மாலை 4½ மணிக்கு வேண்டுமானால் திறக்கிறேன்' என்று கூறிவிட்டான்.

மகிழ்ச்சி பொங்க, சோழனின் புகழ்பாடிச் சென்ற மாணவர்கள், கண்ணீர் கலங்க, விழியிலே நீர் தேங்க, ஆசிரியச் செம்மல்கள் மனமுடைந்து வர மாலை ஊர் வந்தடைந்தனர்.

இந்த நிகழ்ச்சி தமிழ் மாணவர்களிடையே கொந்தளிப்பையும் குமுறலையும் ஏற்படுத்தி உள்ளது.

கங்கைகொண்ட சோழபுரம் கோயில் தர்மகர்த்தாவாக இன்று இருப்பவர் வழக்கறிஞர் நரசிம்மய்யர் அவர்கள் ஆவார்.

எஸ். நாகராசலு
செயங்கொண்டான்

'வறியவரின் வைரம்'

அணுயுகத்தின் அரும் பொருள்

இந்தியாவில் ஏராளமாம்!

'வறியவரின் வைரம்' எனப்படும் 'விர்க்கோன்,' இந்த அணுயுகத்தின் அருமையான பொருள்களுள் ஒன்று—என்று, பிரெஞ்சு அணுசக்திக் குழுவைச் சேர்ந்த டாக்டர் சார்ல்ஸ் ஐசனர் ஜினிவாவில் நடைபெறும் மாநாட்டின் இரசாயனக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

'விர்க்கோனியம்,' இந்தியாவில் நிறையக் கிடைக்கிறது என்றும், அதனைச் சுத்தம் செய்து 'விர்க்கோனு'க ஆக்குவதற்கு வேண்டிய 'குனோரினு'ம் இந்தியாவில் நிரம்ப உண்டு என்றும், இந்தியாவைச் சேர்ந்த பிரம் பிரகாஷ், 'விர்க்கோன் மணல்' பற்றிய தமது கட்டுரையில் எடுத்துரைத்தார்.

"சுத்தமான 'விர்க்கோனியஸ்படிகமே' 'விர்க்கோன்' என்பது; இந்த உலோகம், அணு உலைகளுக்கு ஏற்றதாகும். விர்க்கோனியத்தை, எதுவும், எளிதில் அரிக்க முடியாது; அது, அணு உலையில், நியூட்ரான்களின் வேகத்தைக் குறைத்து, உலைக்குக் கேடு வராமல் காக்கிறது," என்று ஐசனர் கூறினார்.

"அணுசக்தியை அபிவிருத்தி செய்யும் நாடுகள், அணு உலையின் உலோகப் பகுதிகளுக்காக, இயன்றவரைக்கும் 'விர்க்கோனியத்'தை உற்பத்தி செய்ய முயல்கின்றன," என்று, அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீபன் எப். ஷெல்டன் கூறினார்.

முதல் சுதந்திரப் போரின் நூற்றாண்டு விழா

1957ல் கொண்டாட ஆலோசனை

"1857-ல் நடைபெற்ற (சிப்பாய்க் கலகம்) முதல் சுதந்திரப் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை, 1957-ம் ஆண்டில் நாடெங்கும் கொண்டாடுவது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்துவருகின்றனர்," என்று, மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

செய்திச் சுருள்

★

அருப்புக்கோட்டை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பகம்

2-வது ஆண்டு விழாவில் பொதுச்செயலாளர் பேச்சு

14—8—55 மாலை 7 மணிக்கு, பாண்டியன் திடலில் உள்ள அரங்கில், மேற்படி படிப்பக 2-வது ஆண்டு விழா, தோழர் இல. ம சௌந்திர பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

பின்னர், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

மாநில மாநாட்டு நிதி ரூ. 50 அளிக்கப்பட்டது.

டாக்டர் சி. நடேசன் மன்றம்

16—8—55ல், சென்லை—சேப்பாக்கம் டாக்டர் சி. நடேசன் மன்றத்தின் ஆண்டுப் பொதுக்குழு திரு. இரா. நடேசன் தலைமையில் நடைபெற்றபோது, இவ்வாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: கா. அப்பாதுரை; துணைத் தலைவர்: சி டி. சாரங்கபாணி; செயலாளர்: து. கங்காதரம்; துணைச் செயலாளர்: மு பொன்னுரங்கம்; பொருளாளர்: கு. இராதாகிருஷ்ணன்; செயற்குழு உறுப்பினர்கள்:—தோழியர் அலமேலு அப்பாதுரை, அ. வி. செகதீசன், அ வி. பாண்டியன், வெ. மாதவன், செயராமன், கணேசன், குமணன், அறிவழகன், வெங்கடேசன், கோ. தாமோதரம், ராசாராம், கண்ணப்பன்.

திரு. வி. க. பிறந்த தின விழா

14—8—55 மாலை 5 மணிக்கு, கொழும்பு, 75/4 சிந்தம்பிட்டித் தெருவிலுள்ள முத்தமிழ் மன்றச் சார்பில், திரு. வி. க. பிறந்த தின விழா தோழர் தி. இளங்கதிர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. எம் ஜலால், பி. தம்பித்துரை, நா பழனிநாதன், பா. ச. கீதம், ஜே. சோமசுந்தரம், மு க இராசன், உமார் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், இலங்கை தி மு. கழகச் செயலாளர் தோழர் இரா. அதிமணி, திரு.வி க. அவர்களின் நாட்டுப் பணி குறித்தும் அவர் காட்டிய பாதையில் சென்று, அவர் கண்ட கனவை, நனவாக்குவதற்குச் செயல்பட வேண்டும் என்றும், அதுவே அவருக்கு நாம் காட்டும் நன்றி என்றும் குறிப்பிட்டார்.

தோழர் டி எம். பீர்முகம்மது பேசும்பொழுது, திரு.வி.க.-வைப் பற்றி மக்கள் தெரிந்துகொள்வதற்கு முடியாத அளவிற்கு மறைக்கப்பட்டுள்ள திரை கிழித்தெறியப்படவேண்டும்," என்று கேட்டுக் கொண்டார்.

சென்னை 31-வது வட்ட அழகிரி நினைவு மன்றம்

14—8—55 காலை 10 மணியளவில் மேற்படி மன்றப் பணிமனையில் தோழர் ஆ வே. பாண்டியன் தலைமையில் 'வள்ளுவரும் திருக்குறளும்' எனும் தலைப்பில் தோழர்கள் இரா. சேரன், ஆ. வில்லவன் கோதை, கருமுகில், மணிமொழி, தீனன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருச்சி மறுமலர்ச்சிமன்றம்

13—8—55 இரவு 10 மணியளவில் செயலாளர் இல்லத்தில் நடைபெற்ற செயற்குழுவில் திருவள்ளுவர் வார விழா கூட்டத்தின் வரவு செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

பின்னர், தோழர் ஜி பராங்குசம் அவர்கள் தந்தையார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

உறையூரில் நெசவாளர் கோரிக்கை

ஒருநாள் கண்டன வேலை நிறுத்தம் நடத்தினர்

உறையூர், ஆக. 16—
கடந்த 15 தினங்களாக வியாபார அபிவிருத்தி, விலைவாசி உயர்வை முன்னிட்டு, 27 செஜம் கொண்ட பாவு ஒன்றுக்கு ரூ. 18-கூலியும், வருடத்திற்கு 1 மாத போனசும் கோரி உறையூர் நெசவாளர் போராடி வருகின்றனர். இப்பிரச்சினையை சுமுகமாகவும் உடனடியாகவும் தீர்த்துவைக்க வேண்டுமென்று கோரி, 14–8–55 மாலை 1,000-க்கு மேற்பட்ட நெசவாளர்கள் ஊர்வலமாகச் சென்று குருவியான்குளம் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். நெசவாளர்களின் கோரிக்கைகளை ஆதரித்து அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது.

15—8—55ல், மாஸ்டர் வீவர்களின் காலங்கடத்தும் போக்கைக் கண்டிக்கும் முறையில் நெசவாளர்கள் அனைவரும் ஒருநாள் கண்டன வேலை நிறுத்தம் நடத்தினர். அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், பசை பாவுத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர். நேரடியாக ஒவ்வொரு மாஸ்டர் வீவரையும் நெசவாளர்கள் கண்டு, கோரிக்கைகளை ஏற்கு மாறு கேட்டுக்கொண்டு வற்புறுத்தினர்.

சென்னை சைக்கிள் பாக்டரி தொழிலாளர் யூனியன்

12—8—55 மாலை 6 மணிக்கு, சென்னை — அம்பத்தூர் மதுவிலக்குப் போலீஸ் நிலைய மைதானத்தில் திரு. ஜி. எம். மதுரையார் தலைமையில் நடைபெற்ற சங்கப் பொதுக்கூட்டத்தில், சைக்கிள் தொழிற்சாலை தொழிலாளர் சங்கத்தை மேற்படி யூனியனுடன் இணைத்துக் கொள்வதென்றும், சங்கத்தின் சில விதிகளைத் திருத்தியும், தோழர்கள் எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி, எம். இராகவேல் ஆகியோரை முறையே துணைத் தலைவராகவும், துணைச் செயலாளராகவும், மற்றும் தோழர்கள் தேவராஜ் விக்டர் துரைராஜ், கோவிந்தராசுலு ஆகியோரைச் செயற் குழு உறுப்பினர்களாக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர்கள் இராகவேல், இராமரத்தினம், அப்பாதுரை, பாலன், கிருஷ்ணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

• • •

சைக்கிள் பாக்டரி ஒர்க்கர்ஸ் யூனியன்

12—8—55 மாலை 5 மணிக்கு, திரு டி.வி.கோவிந்தராசு தலைமையில் நடைபெற்ற யூனியன் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், மேற்படி யூனியனை சைக்கிள் பாக்டரி எம்பிளாயிஸ் யூனியனுடன் இணைத்துவிடுவதென்றும், யூனியனின் பொருளாதார போக்குவரத்துக்கள் அனைத்தையும் அதனுடன் இணைத்துவிடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிதம்பரம் வட்ட கரும்பு உற்பத்தியாளர் சங்கம்

7—8—55 மாலை 4 மணி அளவில் சிதம்பரம் பச்சையப்பன் பள்ளியில், சிதம்பர வட்ட கரும்பு உற்பத்தியாளர் சங்கச் சார்பில், பாரி கம்பெனியார் நடத்திய பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றமைக்காக, கரும்பு உற்பத்தி சங்க துணைத் தலைவரும், பழைய நல்லூர் ஊராட்சி மன்றத் தலைவருமான திரு. வீராசாமியார் அவர்களைப் பாராட்ட ஒரு விருந்து, டாக்டர் எஸ். நடராச சடாவல்லபர் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் பி. சீனுவாசனுர்,

நம்பப்படாதவர்கள்?

"கிரோட்ட ஆய்வர்கள், சோதிடர்கள், பாம்புக் கடிக்கு மந்திரம் போடுகிறவர்கள்—என்று, பலரகமானவர்கள் உள்ளனர்; இவர்களை சர்க்கார் அங்கீகரிக்கவோ, நம்பவோ இல்லை," என்று. சென்னை மேல்சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறியுள்ளார்.

மன்னார்குடி முத்துக்குமரனுர், சீனி. திருவேங்கடனுர் ஆகியோர் பேசியபின் தி. மு கழகப் பொதுக்குழு உறுப்பினரான தோழர் இரத்தின. பாலகுருசாமி சொற்பொழிவாற்றினுர்.

தோழர் இரத்தின பாலகுருசாமி பாராட்டுரை தாங்கிய புகைப்படம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டது.

கூட்ட இறுதியில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தாராவி—பம்பாய் சௌந்திர பாண்டியனுர் பகுத்தறிவு மன்றம்

11—8—55 இரவு 8 மணிக்கு மன்றப் புத்தாண்டுத் தேர்தல், தேர்தல் அதிகாரி தோழர் மா. இரா. குறள்தாசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் இராசாமணியைச் செயலாளராகக் கொண்ட புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

• • •

15-8-55 மாலை 6-30 மணிக்கு, மேற்படி மன்றச் செயற்குழுக் கூட்டம், தோழர் வின்சென்ட் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

கரூர் தனம்—மனோகரன் சொற்பயிற்சி மன்றம்

14—8—55 மாலை நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் மன்றத் துவக்க விழா தோழர் எம். கே. கரிகாலன் தலைமையில் நடைபெற்றது. சொற்பயிற்சி மன்றம் அமைக்கப்பட்டதின் நோக்கம் பற்றி தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

தமிழர் கழகத் திறப்புவிழா

தார்வார் தாலுகாவைச் சேர்ந்த உப்பள்ளியில், 15-8-55ல் தோழர் வஜ்ஜிரவேலு தலைமையில் தமிழர் கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் சுப்பிரமணியம் கொடியேற்றிவைத்தார். தமிழர்களுக்கென ஒரு படிப்பகத்தை தலைவர் அவர்கள் திறந்துவைத்தார்.

பிறப்பு

14—8—55 காலை 10 மணிக்கு, சேலம் அம்மாபேட்டை, தி.மு. கழகத் தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு அவர்களின் துணைவியார் தோழியர் சாரா அம்மையார் ஒரு பெண் மகவுக்குத் தாயானுர். தாயும்—சேயும் நலம். குழந்தைக்கு 'அறிவுக்கொடி' என பெயரிடப்பட்டது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

கடலூர் தோழர் இரா. பழனிசாமி துணைவியார் அகிலாண்டம் அம்மையார், 17—8—55ல், ஓர் ஆண் மகவுக்குத் தாயானுர்; அம்மகவுக்கு 'அறிவழகன்' எனப் பெயரிடப்பட்டது.

மறைவு

சேலம் கழகத் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களது பெண் மகவு இராசகுமாரி 4—8—55-ல், இயற்கை எய்தியதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

• • •

திருநெல்வேலி—வண்ணரப்பேட்டையைச் சேர்ந்த ஏ. வி. எம். முத்தையா (ரிடையர்ட் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்) தமது 76-வது வயதில் இயற்கையெய்தினுர்.

'எல்லைக்கிளர்ச்சி' 'வாபஸ்...'!

அமைச்சரின் வாக்குறுதியை ஏற்றுக்கொண்டனராம்!

சென்னை, ஆக. 24—

'ஆந்திரா—தமிழ் நாடு எல்லைத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு 'எல்லைக் கமிஷன்' ஏற்படுத்த வேண்டும்,' என்று வற்புறுத்துவதற்காக, சென்னை சட்டசபை முன்பு மறியல் செய்வதன் மூலம் ஆர்ப்பாட்டம் நடத்துவதும், தடையை மீறுவதும் ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகராறுகள், இவ்வாண்டு முடிவுக்குள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படுமென்றும், எல்லாக் கட்சியினருக்கும் அது நியாயமானதாக இருக்குமென்றும் சர்க்கார் உறுதி அளித்ததின் மீதுதான், இவ்வாண்டு முடிவுவரையில், கிளர்ச்சியை ஒத்திவைத்திருப்பதாக, பொதுக்கூட்டமொன்றில், ம. பொ. சி. குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாண்டு முடிவுக்குள் திருப்திகரமான முடிவுகள் இப்பிரச்சினையில் ஏற்படாவிட்டால், தகராறுகளைத் தீர்ப்பதற்கு 'எல்லைக் கமிஷனை' நியமிக்குமாறு மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்வதாக நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியுள்ளாராம்!

1955 டிசம்பர் 31-ந் தேதிக்குள் வாக்குறுதி தந்துள்ளபடி அரசாங்கம் இப்பிரச்சினையைத் தீர்காவிட்டால் ம. பொ. சி. மீண்டும் 'போராட்டம்' ஆரம்பிக்க முயற்சிப்பாராம்!

"சித்தூர் மாவட்டத்தில் காளஹஸ்தி, திருத்தணி, புத்தூர், சந்திரகிரி, சித்தூர், பலமனேரி ஆகிய தாலுகாக்கள் பற்றியும், நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த சூளூர்பேட்டை தாலுகா பற்றியும் பேச்சு நடத்த விரும்புவதாக ஆந்திர சர்க்காருக்கு, அறிவிக்கப்பட்டிருக்கிறது," என்று சென்னை சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

இப்பிரச்சினைமீது விவாதிப்பதற்கு, ஆந்திர முதலமைச்சரை, வரும் செப்டம்பர் மாதத்தில், சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சந்திப்பாராம்; முதலமைச்சர் காமராசரும் அப்போது உடனிருப்பாராம்!

அப்போது, சிறுபான்மையோருக்கு மொழி, கலாச்சாரப் பாதுகாப்பு அளிக்கும் பிரச்சினையும் விவாதிக்கப்படுமென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் பேசுகையில் அறிவித்துள்ளார்.

பாக். அரசியல் நிர்ணய சபையில் குழப்பம்?

கராச்சி, ஆக. 23—

மேற்கு பாகிஸ்தானை 'ஒருமுப்பு திட்ட'த்தில் சேர்ப்பதற்கான மசோதா, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் பிரரேபிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டபோது, சபையில் நீண்ட நேரம் குழப்பமும் கூச்சலும் நிலவியதாம்.

பாலாறு நீர் தகராறு

மைசூர்-சென்னை அதிகாரிகள் விவாதிப்பர்

புதுடில்லி, ஆக 23—

பாலாறு நீரை உபயோகப்படுத்திக் கொள்வதுபற்றி மைசூர்—சென்னை மாநிலங்களிடையே இருந்துவரும் தகராறைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக இரு மாநில அரசாங்கங்களின் பிரதம எஞ்சினியர்கள் சீக்கிரமே கூடிப் பேச வேண்டும் என்றும், அவர்களுக்கு உதவியாக மத்திய நீர்—மின்சார குழு அதிகாரி ஒருவர் உடனிருப்பார் என்றும், மத்திய சர்க்கார் தெரிவித்த யோசனையை இரு மாநிலங்களும் ஏற்றுக்கொண்டு விட்டன என்று தெரிகிறது.

இந்த தகவல் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலாகத் தரப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோர் கோரிக்கைகள்

பம்பாயில்...!

பம்பாய், ஆக. 23—

"மக்கள் சபை, மாநில சட்ட சபைகள், மாவட்டக் கழகங்கள், நகர சபைகள், பஞ்சாயத்து பொதுச் சபைகள் ஆகியவற்றிற்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனி இடம் ஒதுக்கப்பட்டு வருவது, இனித் தேவையில்லை; அடுத்துவரும் பொதுத் தேர்தல்களுக்குள்ளாகவே, இந்தத் தனி இடம் ஒதுக்கும் முறையை ஒழித்துவிட வேண்டும்,"

என்று, அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளன நிர்வாகக் குழு, டாக்டர் அம்பேத்கார் தலைமையில் கூடியபோது முடிவெடுத்திருக்கிறதாகத் தெரிகிறது.

தீர்மானத்தைப் பற்றிப் பேசிய டாக்டர் அம்பேத்கார்,

"கடந்த காலத்தில் தனி இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று, சம்மேளனம் போராடியது; ஆனால், இந்தத் தனி இடம் ஒதுக்கும் அவசியம் இப்போது இல்லை; அதனை ஒழிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது,"

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பல கிராமங்களில், தாழ்த்தப்பட்டவர்கள் இன்னும், சாதி இந்துக்களின் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுவதைக் கண்டித்திருப்பதுடன், அவர்கள் தனியாக வாழ 'காலனி'கள் அமைத்துத் தர வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது.

பஞ்சாபில்...!

அமிருதசரஸ், ஆக. 23—

சொந்தமாக்கிக்கொள்ளும் உரிமையோடு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் வழங்கப்பட வேண்டும்; பஞ்சாப் சட்ட சபைக்கு தனித் தொகுதி ஒதுக்கி தருவதை நீடிக்கவேண்டும்; பின் தங்கிய வகுப்பினருக்கு, தொழில் வரியை விதிப்பதை ரத்து செய்யவேண்டும்; உத்தியோகங்களில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 21 சதவிகிதம் ஒதுக்க வேண்டும்; இப்படி ஒதுக்கித் தருவதை, 10 ஆண்டுக் காலத்திலிருந்து 20 ஆண்டுக் காலத்திற்கு நீடிக்க வேண்டும்,"

என்று, அகில பஞ்சாப் தாழ்த்தப்பட்டோர் கட்சிகளின் மாநாடு ஒன்றில் கோரப்பட்டிருக்கிறது.

தேசிய மூவர்ணக் கொடியில் 'காக்கி' வர்ணத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் நாடெங்கும் 'காக்கி'க் கொடி பறக்கவிடவேண்டும் என்றும், மாநாட்டில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மணிக்கு 717 மைல்!

சமீபத்தில், ஓர் இராணுவ ஜெட் விமானம், மணிக்கு 717 மைல் வேகத்தில் பறந்து சென்று, ஒரு புதிய 'ரிகார்டை' ஏற்படுத்தியுள்ளது.

ஆதிக்கத்தை நிலைநாட்ட ஒரு இலட்சம் துருப்புகள்

பிரெஞ்சு இராணுவத்தின் நடவடிக்கை

பாரிஸ், ஆக. 23—

கடந்த வார இறுதியில் வடக்கு ஆப்பிரிக்காவில் மொராக்கோவிலும், அல்ஜீரியாவிலும் தேசியவாதிகள் நடத்திய ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கென கடந்த 30 ஆண்டுகளில் எப்போதும் இல்லாதபடி, சுமார் ஒரு இலட்சம் பிரெஞ்சு இராணுவத்தினர், தகுந்த விமான, ஆயுதத் தளவாடங்களுடன் புறப்பட்டனராம்.

கடந்த இரு நாட்களிலும் இராணுவத்தினர், அல்ஜீரியாவிலும், மொராக்கோவிலும், ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

ஸ்பானிஷ் மொராக்கோவில் புரட்சி செய்த அப்டெல்கரீம் என்பவரை அடக்க 30 ஆண்டுகளுக்கு முன்பு பிரெஞ்சு இராணுவத்தினரும், ஸ்பெயின் இராணுவத்தினரும் கூட்டாக நடவடிக்கை மேற்கொண்டனராம்.

அப்துல் கரீம் மேற்கொண்ட 'புரட்சி' அடக்கப்பட்டதுடன், அவர் 1925 மே திங்களில் இராணுவத்திடம் சரணடைந்தாராம

அதற்குப் பிறகு ஆர்ப்பாட்டங்களை அடக்க இவ்வளவு பெரும் அளவு இராணுவம் இப்போது தான் முற்பட்டதாம்.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற கிளர்ச்சியில் சுமார் 1,500 பேர்கள்வரை பலியாயினர்.

'பால் மாற்றம்'

அம்பாலா, ஆக. 23—

அம்பாலா நகரத்தைச் சேர்ந்த ஒரு பட்டதாரியான 21 வயதுப் பெண்மணி, இப்போது அழகான ஆணாக மாறிவருகிறாராம்!

கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக, இந்த 'பால் மாற்றம்' ஏற்பட்டு வருகிறதாம்

நகரில் உள்ள பள்ளி ஒன்றில் பணிபுரியும் இந்த 'பெண்மணி,' திரும்பவும் தான் பெண்ணாக மாறிவிடவே விரும்பியுள்ளாராம்.

டாக்டர்கள், ஒரு அறுவை சிகிச்சையை மேற்கொண்டு, அவர் முழுவதும் ஆணாக மாறிவிடாது செய்ய இருக்கின்றனராம்!

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்ட மந்திரி!

'நோட்டீஸ்' பற்றி எதிர்க் கட்சியினர் விவாதிப்பர்

ஜலந்தர், ஆக. 23—

லாலா ஜெகத்நாராயண் என்ற பஞ்சாப் கல்வி மந்திரி மீது இலஞ்சக் குற்றம் சாட்டிய சட்ட சபை எதிர்க் கட்சியினர், ஆகஸ்டு 26-ந் தேதியன்று டில்லியில் கூடி, 'மன்னிப்புக் கோருமாறு மந்திரி அனுப்பியுள்ள 'நோட்டீஸ்' பற்றி விவாதிப்பர் என்று குழுவில் ஒருவரான கேதர்நாத் சேகல் என்ற சட்ட சபை உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகஸ்டு 26-ந் தேதி இது பற்றி முடிவு எடுக்கப்படும்; ஆனால், 'எனது சொந்தக் கருத்து, மந்திரி மீது உள்ள குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெறக் கூடாது; எங்களை அவர் கைது செய்து நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்பதே,' என்று அந்த உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார்

சென்னை மாநிலத்திலுள்ள படக்காட்சி அரங்குகள்

"1955 பிப்ரவரியில், சென்னை மாநிலத்தில் 313 நிரந்தர படக்காட்சி அரங்குகளும், 139 தற்காலிக (டூரிங்) அரங்குகளும் இருந்தன; தற்காலிகமான அரங்கின் கொட்டகைகளை அமைக்கும் இடம் சம்பந்தமான கட்டுப்பாடுகளை அகற்றும் உத்தேசம் இப்போது சர்க்காருக்குக் கிடையாது," என்று, சென்னை சட்டசபையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

25—8—55: மாலை 4 மணிக்கு: மதுரை, தியாகராசர் கல்லூரி; மாலை 7 மணிக்கு: சோழவந்தான் பொதுக்கூட்டம்.

கிருத்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவை

தாம்பரம் கிருத்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பாக 25—8—55 வியாழன் மாலை 4 மணிக்குக் 'குறள் விழா'ச் சிறப்புக்கூட்டம் நடைபெறும்.

அதுபோது தோழர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

சொற்பொழிவாற்றுவார்

மாயூரம் நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

24—8—55 இரவு 8 மணிக்கு மாயூரம், பி. டி. ராஜன் ரெயின்போ ஆர்ச்சில், மாயூரம் நகர தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும் அதுபோது, கோவா அரசியல் நிலை பற்றிய பொதுச் செயலாளர் அறிக்கை, பொதுச் செயலாளர் வரவேற்பு ஆகியவை பற்றி ஆலோசிக்கப்படும்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு!

"நமது மாவட்டத்தில் கல்லூரியில் பயிலும் மாணவர்களும், இதர கழகத் தோழர்களும், மாவட்டக் கழகத்தின் சார்பில், சொற் பயிற்சி மன்றம் ஒன்று நிறுவி, அதன்மூலம் கழகத் தோழர்களுக்கு சொற் பயிற்சி அளிக்க வேண்டுமென்று என்னிடம் நேரிலும், கடிதமூலமும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்; எனவே, அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றவும், நம் கொள்கைகளை மாவட்டத்தில் பரப்பவும்வேண்டி, 26—8—55 மாலை 5-30 மணிக்கு, வடசேரி தி. மு கழக அலுவலகத்தில், 'அண்ணா சொற்பயிற்சி மன்றம்' ஒன்று நிறுவுவதற்கு வேண்டிய ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். சொற் பயிற்சி பெற விரும்பும் தோழர்கள் அன்றையக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி. எம் ஜான் அறிவிக்கிறார்.

அமெரிக்காவில்.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களை 'நீக்ரோவர்' என நினைத்த நிறவெறி, அந்த விடுதி நிர்வாகியிடம் தாண்டவமாடியதாம்!

"சட்டம் என்றால் சட்டம்தான்; நான் கூறியபோது, அந்த இருவரும் வெளியேறியிருக்காவிட்டால், அவர்களை வெளியேற்றி இருப்பேன்!"

என்று, அந்த உணவு விடுதி நிர்வாகியான ஒரு பெண்மணி கூறியதாக, ஹௌஸ்டனில் உள்ள பொதுமக்கள் தொடர்பு அதிகாரி குறிப்பிட்டிருக்கிறார்.

மேத்தாவையும், அவரது செயலாளரையும் நீக்ரோவரென நினைத்தாராம், அந்தப் பெண்மணி!

'பாகுபாடு மாற்ற ஒப்பந்தம், சந்தேகமில்லாமல், சாப்பாட்டு அறைக்கும் சேர்த்துத்தான்,' என்று மற்றொரு அதிகாரி குறிப்பிட்டிருக்கிறார்.

இதுமாதிரி சம்பவங்கள் முன்பு இருமுறை நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க 'இராஜாங்க' இலாகா மந்திரியான டல்லஸ், இச்சம்பவத்திற்காக, வருந்துவதாக மன்னிப்புக் கோரி, மேத்தாவிற்குத் தந்தி ஒன்று அனுப்பியுள்ளாராம்.

அமெரிக்க சர்க்கார் சார்பில் மன்னிப்புக் கடிதம் ஒன்று டில்லி சர்க்காருக்கு அனுப்பப்படவிருக்கிறது என்றும் தெரிகிறது.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஆக. 27 மாங்காடு-திருமணம்
28 திருப்பத்தூர் (வ. ஆ.) காலை: திருமணம்; மாலை: பொதுக் கூட்டம்
30 சென்னை 5-வது வட்டம்
31 திருவாரூர்-திருமணம்

மருத்துவ மனைகளில் ஆண்-பெண் 'தாதி'கள்

'பாதுகாப்பு' நிலைமை பற்றி சட்ட சபையில் பிரச்சினை

"மருத்துவ மனைகளில் பெண் 'தாதி'யர்களிடமிருந்து ஆண் 'தாதி'யர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது பற்றி கவனிக்கப்படுமா?" என்று சட்ட சபையில் ஒரு உறுப்பினர் கேட்டார்.

"அப்படியில்லை; ஆண் 'தாதி'யர்களிடமிருந்துதான், பெண் 'தாதி'யர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது தேவையாக உள்ளது," என்று சுகாதார அமைச்சர் பதிலளித்தார்.

கே:- பெண் 'தாதி'யர்கள் 90 சத விகிதத்தினராகவும், ஆண் 'தாதி'யர் 10 சத விகிதத்தினராகவும் மருத்துவ மனைகளில் உள்ளனர்; ஆகவே, ஆண் 'தாதி'யர்களின் தொகையை அதிகரிப்பதின் மூலம், பெண் 'தாதி'யர்களால் ஏற்படும் 'தொல்லை'களிலிருந்து பாதுகாப்பு அளிப்பது பற்றி கவனிக்கப்படுமா?"

ப:- "தாதியர் வேலையில் ஆண்களைவிட பெண்களே திறமைசாலிகள்; எனவே, அதுபற்றிய யோசனையை ஏற்பதற்கில்லை."

சிபாரிசுகளை ஏற்றனர்

சட்டம் இயற்றப்படுமாம்!

பாங்கி ஊழியர் நிலைமைபற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட கஜேந்திர கட்கார் கமிஷன் சிபாரிசுகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ளுவதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாக மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிபாரிசுகளை அமுல் செய்வதற்கான சட்டம், சீக்கிரத்தில் இயற்றப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

மேல் பாலங்கள் அமைப்பதற்குக் கடன்

புதுடில்லி, ஆக. 23—

இப்போது, கீழ் பாலங்களு ('லெவல் கிராசிங்')க்குப் பதிலாக, மேல் பாலம் அமைப்பதற்கு, சென்னை மாநிலத்தில் ஸ்தல நிர்வாகங்கள் தரவேண்டிய பங்கிற்காக அவற்றிற்கு சுமார் 68.15 இலட்சம் ரூபாய் கடன் வழங்கும் திட்டத்தினை, திட்டக்குழு ஏற்றுக் கொண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கென ஆந்திர மாநிலத்திற்கு ரூ. 1.9 இலட்சம் கடன் வழங்கவும் அனுமதி தரப்பட்டிருக்கிறதாம்.

தென்னாட்டில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பரில் சென்னை வரும் போது, அவர் திருச்சி, காரைக்குடி முதலிய இடங்களுக்கும் வருகை தருவார் என்று கூறப்படுகிறது.

"தீபாவளி நவம்பர் திங்களில் வருகிறது; அநேகமாக தீபாவளியை இராசேந்திரர், தென்னாட்டிலேயே கொண்டாடுவார்" என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.